

ஜெனோ மோகன்
சமூகச் செயல்பாட்டாளர்





# தூய்மைப் பணியாளர் நிலை.. சமூகம் மாறவேண்டும்..

கொரோனா காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவர்களுக்கு மாலைகள் அணிவித்தும், சால்வைகள் அணிவித்தும் மரியாதை செய்ததை நாம் கண்டுள்ளோம். நமது பிரதமர் மோடி அவர்களது கால்களைக் கழுவி மரியாதை செய்தார்.

மழை, பெரு மழை, வெள்ளம், புயல், சுனாமி இத்தகைய எவ்விதமான இயற்கைப் பேரிடராக இருந்தாலும் மக்கள் பணியில் முன்களப் பணியாளர்களாக முன்வரிசையில் நிற்பவர்கள் தூய்மைப் பணியாளர்கள் அல்லது தூய்மைக் காவலர்கள். இவர்கள் தான் நகரையும் நம் வாழ்வினையும் பளிச்சென வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாழ்வு பிரகாசமாக இல்லை என்பது தான் வேதனை.

தூய்மைப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், அரசு நிர்வாகத்தின் அடிப்படையில் கிராமப்புற அல்லது பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, பெருமாநகராட்சிப் பணியாளர்கள் எனப் பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். தமிழகத்தில் இதில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்றவாறு பணியும், பணிநேரமும், ஊதியமும் வேறுபடுகிறது. குறிப்பாக கிராமப்புற துப்புரவுப் பணியாளர்கள் முழு நேரமாகப் பணிபுரிந்தாலும் அவர்கள் பகுதி நேரப் பணியாளர்களாகவே கருதப்படுகிறார்கள். நகராட்சி, மாநகராட்சி மற்றும் பெருமாநகராட்சிப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் 100 சதவிகிதம் இன்று தனியார்மயமாக ஆக்கப்பட்டிருக்கிறது. 2022 அக்டோபர் மாதம் தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அரசாணைகள் மூலமாக இனிமேல் தூய்மைப் பணிக்கு அரசு சார்பில் பணியமர்த்தப்பட மாட்டாது என உறுதியாக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தனியார்மயமாக்கப்பட்டு விட்டது.

கிராமப்புற அல்லது பஞ்சாயத்துத் துப்புரவுப் பணிகளைப் பொறுத்தமட்டில் அந்தந்த பஞ்சாயத்துக்கள் அல்லது பேரூராட்சி நிர்வாகங்களே ஆட்களை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாகங்கள் முறையாக எந்தவிதமான பதிவேடுகளையும் பின்பற்றுவதில்லை. அதன் விளைவு ஒவ்வொரு முறையும் அதிகாரத்துக்கு வரும் பஞ்சாயத்துத் தலைவர்களைப் பொறுத்து துப்புரவுப் பணியாளர்கள் நீக்கப்படுவதும் சேர்க்கப்படுவதும் தொடர் கதைகளாகிறது. ஒரு நாளைக்கு ரூ.120 தான். இவர்களது ஊதியம். பிற தேவைகளுக்கு பொது மக்களிடம் கையேந்தும் நிலைதான்.

தொடர் துயரத்திலிருக்கும் துப்புரவுப் பணியாளர்கள் ஒருபுறம் என்றால் மறுபுறம் மனித மாண்புக்கே எதிரான, உயிரைப் பணயம் வைத்து, பாதாளச் சாக்கடைகளிலும், செப்டிக் டேங்குகளிலும் இறங்கி சுத்தம் செய்யும் தூய்மைப் பணியாளர்களின் நிலை சொல்லி மாளாது. நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 1125 பேர் மனிதக் கழிவகற்றும் பணியில் ஈடுபட்டு விஷவாயு தாக்கி உயிரிழந்துள்ளனர். இதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பது மிகவும் வேதனைக்குரியது. உலகின் எந்த நாட்டிலும் இல்லாத ஈவு இரக்கமற்ற இதுபோன்ற நடைமுறை நம் நாட்டில்தான் இருக்கிறது. தலித் மக்களுக்கு எதிரான சாதிய அமைப்பின் உச்சபட்ச தண்டனை இதுதான்.

ஐ.நா. அவையில் 1976இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது இந்தியாவில் 1993இல் நடைமுறைக்கு வந்தது. "கையால் மலம் அள்ளுதல் ஒழிப்பு மற்றும் உலர் கழிப்பறைகள் தடைச் சட்டம் - 1993" என்கிற சட்டத்தின் மூலம் இந்த அநீதியான கொடூரமான நடைமுறை முடிவுக்கு வந்தது. "மனிதக் கழிவகற்றுவோர் மறுவாழ்வுச் சட்டம் - 2013" என்கிற சட்டமும் நடைமுறைக்கு வந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் இந்தியாவிலேயே முதன் முறையாக தூய்மைப் பணியாளர்களின் மேம்பாட்டிற்காக 2007இல் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் அமைக்கப்பட்டது. தூய்மைப் பணியாளர்கள் குறித்துத் தனிக்



கவனம் செலுத்தவும், அவர்களின் பிரச்சனைகளை விவாதிக்கவும் இவ்வாரியம் பயன்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு 2011இல் அது கலைக்கப் பட்டது. பின்னர் 2020லிருந்து அது மீண்டும் செயல் படத் தொடங்கியுள்ளது. தொழிலாளர்கள் என்கிற அடிப்படையில் அவர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்கள் இதன்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2015இல் நீதியரசர் சதாசிவம் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு வலிமையான தீர்ப்பை வழங்கியது. இப்பணியில் ஈடுபட்டு உயிரிழக்கும் தொழிலாளிக்கு ரூ. 10 லட்சம் நிவாரணம் என அறிவித்தது. தற்போது இந்த நிவாரணத் தொகையை ரூ. 30 லட்சம் வழங்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. மனிதக் கழிவகற்றுவோர் விஷவாயு தாக்கிக் கொல்லப்படுவது தொடர் கதை யாகவே இருக்கிறது என்பது ஒருபுறம் இருந்தாலும் சாதி அடிப்படையிலான மனிதாபிமானமற்ற மரணங் களுக்கு செக் வைத்தது போல இருந்தது. எனினும், உயிரிழப்புகள் குறைந்தபாடில்லை. சட்டத்தால் எல்லாவற்றையும் மாற்றிவிட முடியாது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம். அப்படியென்றால் சமூகம்தான் அதை மாற்றுவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

குறுகிய இடங்களுக்குச் சென்று கூட கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு ஏதுவாக சிறிய ரக இயந்திரங்களை சமீபத்தில் சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். கேரள அரசு பண்டிகூட் என்கிற ரோபோவை அறிமுகப்படுத்தி இம்முறைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தமிழகத்தில் கூட இந்த ரோபோ சில நகரங்களில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. எனினும் இதுபோன்ற சிறு இயந்திரங்களைக்கூட வாங்குவதற்கு நிதிப் பற்றாக்குறை என்கிற ஒரு காரணத்தைக் கூறி அலட்சியம் செய்து விடுகிறார்கள் ஆட்சியாளர்கள்.

தூய்மைப் பணியாளர்களின் மேற்கண்ட பல்வேறு பிரச்சனைகளுக்கும் அவர்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததும், அமைப்பாக்கப்படாமல் உதிரிகளாக இருப்பதுமே காரணமாகிறது. இவர்களின் பிரச்சனைகளை ஒரு பிரச்சனையாகவே பார்க்காமல் பொதுச் சமூகம் கடந்து போவதும் மிக முக்கிய காரணியாக இருக்கிறது.

பல்வேறு இயற்கைச் சீற்றங்களில் இவர்களது உழைப்பு இன்றியமையாதது என்பதை அனைவரும் அறிவர். குறிப்பாக, கொரோனா காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவர்களுக்கு மாலைகள் அணிவித்தும், சால்வைகள் அணிவித்தும் மரியாதை செய்ததை நாம் கண்டுள்ளோம். நமது பிரதமர் மோடி அவர்களது கால்களைக் கழுவி மரியாதை செய்தார். எனினும் இவை எல்லாம் தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கை மேம்பாடு அடையவும், கண்ணியமான வாழ்க்கை அமைந்திடவும் போதுமானதாக இல்லை.

எட்டு மணிநேரம் வேலை என்பதுவே போராடிப் பெற்ற தொழிலாளர்களின் உரிமை. இன்றைய அவுட் சோர்சிங் முறையில் காணாமல் போய்விட்டது. வைப்புத் தொகை, மருத்துவக் காப்பீடு என்பவை வெறும் வாய் வார்த்தைகளில் தான் இருக்கின்றன. சமீபத்தில் கோவையில் 16 ஆண்டுகள் தனியார் ஒப்பந்த முறையில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு முறையாக வைப்புத் தொகை செலுத்தாததால் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதி கிடைக்காமல் போய்விட்டது என்பது கசப்பான உண்மை. தனது ஒப்பந்த காலத்தை முடித்து அந்த வடநாட்டுக் கம்பெனி ஊரைக் காலிசெய்த பின்னரே உண்மை வெளியில் தெரியவந்தது. பணியாளர்களுக்கான ஊதியமாவது உரிய நேரத்தில் கிடைக்கிறதா என்றால் அதுவும் கிட்டுவதில்லை. 1ஆம் தேதி கிடைக்க வேண்டிய ஊதியம் 10-15 தேதிகளில்தான் கிடைக்கிறது. அதுவரை தனது வீட்டுத் தேவைகளுக் காக மீட்டர்வட்டி, ரன் வட்டி, கந்து வட்டி என வட்டிக் காரர்களை நம்பியே காலம் கழிகிறது. தொழிலாளர்களின் 8 மணிநேர வேலைக்கும், ஊதிய உயர்வுக்கும் போராடுவதா? அல்லது சரிசமமாக பெண்கள் இப்பணியில் ஈடுபடுவதால் பெண்களின் பிரச்சனையாகப் பார்ப்பதா? அல்லது 90 சதவிகிதம் பேர் இப்பணியில் தலித்துகளாக இருப்பதால் தலித்தியப் பார்வையில் அணுகுவதா? எது எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும் அவர்களது உரிமைகள் காக்கப்பட வேண்டும்.

1950 நவம்பர் 26இல் டாக்டர் அம்பேத்கர் அரசியலமைப்பின் முகவுரையை அறிமுகப்படுத்தி "இந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறோம் என்பதில்தான் இதன் வெற்றி இருக்கிறது. சட்டங்கள் சரியாக இருந்து அதை நடைமுறைப்படுத்துவதில் மோசமான செயல்பாடு இருந்தால் இந்த ஏற்றத்தாழ்வுகளை ஒருபோதும் நீக்கவே முடியாது" என்றார். காலங்கள் கடந்தாலும் அன்றைய அம்பேத்கரின் கூற்று இன்றைக்கும் பொருந்துகிறது.